| |
|---|
| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai |
| Date: 10.04.2026 |
| STC No. 404/2024 |
| சாட்சி :PW1 |

| | |
|---|---|
| பெயர் : திரு. டேவிட் பிரபாகரன் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. ஆரோக்கியசாமி | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுக்கா : | வயது : /2026 |
| ( எதிரி ஆஜர் , எதிரி வழக்கறிஞர் ஆஜர்) | |

---------------------------------------------------------------

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** ஸ்ரீ கோகுலம் சிட் பைனான்ஸ் நிறுவனத்தில் நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் கலெக்சன் ஏஜெண்டாக பணிபுரிந்து வருகிறேன். எத்தனை வருடமாக பணிபுரிகிறேன் என்றால் 5 வருடமாக பணிபுரிகிறேன். மணப்பாறை கிளை எந்த ஆண்டு தொடங்கப்பட்டது என்றால் நான் 2020 ம் ஆண்டு பணியில் சேர்ந்தேன். மணப்பாறை கிளை எந்த ஆண்டு தொடங்கப்பட்டது என்று எனக்கு குறிப்பாக தெரியாது என்றால் ஆமாம். ஸ்ரீ கோகுலம் சிட் பைனான்ஸ் நிறுவனம் சட்டப்படியான நிதி நிறுவனம் என்பதற்கு முறைப்படியாக ஆவணங்கள் ஏதெனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு ஸ்ரீ கோகுலம் சிட் பைனான்ஸ் நிறுவனம் எனக்கு அங்கிகாரம் ஏதெனும் அளித்துள்ளதா என்றால் அளித்துள்ளது. அந்த அங்கிகார ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

2. நான் தாக்கல் செய்துள்ள ஆவணப்படி முறையாக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கு மனு செய்து அனுமதி பெறவில்லை என்று சொன்னால் சரிதான். ஸ்ரீ கோகுலம் சிட் பைனான்ஸ் நிறுவனத்தின் படி வழக்கு நடத்துவதற்கு எனக்கு அதிகாரம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த எதிரி செல்வராஜ் சீட்டில் சேர்ந்த திட்டம் திருச்சி கிளை அலுவலகத்தில் சேர்ந்தார் என்று சொன்னால் அது தவறு. மணப்பாறை கிளை அலுவலகத்தில் தான் சீட்டு திட்டத்தில் சேர்ந்தார். என்ன தேதியில் சேர்ந்தார் என்றால்

21.12.2013 அன்று சேர்ந்தார். 21.12.2013 அன்று எதிரி சீட்டில் சேர்ந்தார் என்பதற்கு எங்கள் அலுவலகத்தில் ஆவணங்கள் பராமரித்து வருகிறோமா என்றால் ஆமாம். எதிரி குறித்து ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். 2013 ம் ஆண்டு மணப்பாறையில் ஸ்ரீ கோகுலம் சிட் பைனான்ஸ் நிறுவனம் தொடங்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. மணப்பாறை கிளையில் ஆவணங்கள் இல்லை என்றால் இந்த வழக்கு பொய்யாக போடப்பட்டது என்று சொன்னால் அது தவறு.

3. 21.12.2013 அன்று எத்தனை சீட்டு சேர்ந்தார் என்றால் 20 மாத சீட்டு, இரண்டு சீட்டுகள் சேர்ந்தார். அந்த இரண்டு சீட்டுகளும் மணப்பாறை கிளையில் சேர்ந்ததாக சொல்கிறேன் என்றால் ஆமாம். சீட்டில் சேர்ந்ததன்று என்னென்ன ஆவணங்கள் எதிரியிடம் பெற்றோம் என்றால் ஆதார்கார்டு மட்டும் பெற்றோம். அந்த ஆதார் கார்டு எங்கள் அலுவலக கோப்பில் உள்ளதா என்றால் உள்ளது. எத்தனை சீட்டுகள் கட்டினார் என்றால் மாதம் மாதம் 21 ம் தேதி கட்டினார். எந்த தேதி வரை கட்டினார் என்றால் குறிப்பிட்டு சொல்ல இயலாது. எதிரி தொடர்பான கோப்புகளை நீதிமன்றத்திற்கு கொண்டுவந்துள்ளேனா என்றால் இல்லை. என்னால் அந்த கோப்பை எடுத்து வந்து சாட்சியம் அளிக்க முடியுமா என்றால் முடியும்.

(எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது )

Taken over by me in open court read over
to the witness and admitted by the witness
to be correct.

Sd/-R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.